1974 மார்ச் 20]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்படி ஏரிகளிலும் குளங்களிலும் ஏதோ விரோதத்தின் காரணமாக இப்படிப்பட்ட செயல்கள் நடந்து விடுகின்றன. அப்படி ஏற்படாமல் பாதுகாக்க வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

திரு. எம். சுரேந்திரன்: மேட்டூர் அருகில் உள்ள ரசாயன தொழிற்சாலைக் கழிவு நீர் வருவதன் மூலம் இம்மாதிரி மீன்கள் செத்துவிடுகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? அவ்வாறு மீன்கள் சாகாமல் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: எனக்கு அது பற்றிய தகவல் வரவில்லை. அதுபற்றிய தகவல்கள் வருமானால் மீன் இலாகாவைப் பரிபாலிக்கும் அமைச்சர் அவர்கள் அதைப் பற்றிக் கவனம் செலுத்துவார்கள்.

தொழிலாளர்களுக்கு வீட்டு வசதி

*** 521 வினா—திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் தொகுதியில் வீட்டு வசதி வாரியத்தின் மூலம் தொழிலாளர்கட்கு வீடு கட்டித்தர அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மேட்டுப்பாளையம் தொகுதியில் மேட்டுப்பாளையம் அருகில் உள்ள காரமடை என்ற ஊரில் இராமகிருஷ்ணா தொழிலகத்திலும், இராஜலெட்சுமி ஆலையிலும் வேலை செய்யும் தொழிலாளர்களுக்காக 60 குடியிருப்புக்கள் கட்டுவதற்கான ஒரு திட்டம் ரூ. 5.51 லட்சம் மதிப்பில் 27—10—1972 அன்று நடைபெற்ற தமிழ்நாடு வீட்டு வசதி வாரியக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வீட்டு வசதி வாரியம் இத்திட்டத்திற்கு அரசின் ஒப்புதல் கோரும்போது அரசு இத்திட்டத்தினைப் பரிசீலிக்கும்.

திரு. எம். சுரேந்திரன்: இம்மாதிரி வீடு கட்டுவதற்கான நடவடிக்கையில் தொழிற்சாலை நிர்வாகத்திற்குப் பங்கு இருக்கிறதா? இதுபோன்ற தொழிற்சாலைகளில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு வீடு கட்ட அரசாங்கம் மானியம் கொடுக்கும்

திட்டம் இருக்கிறதா? அவர்களாகவே முன்வந்து சொசைடியாக அமைத்து வீடு கட்ட விரும்பினால் துரிதமாக உதவிகளைச் செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: ராமகிருஷ்ணா தொழிலகத்தில் இருக்கும் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். தொழிலாளர் பங்கும் இருக்கிறது, தொழிற்சாலை பங்கு 20 சதவிகிதம் இருக்கிறது. மீதி 50 சதவிகிதம் மானியமாகவும், மீதி கடனாகவும் தரப்படுகிறது. எந்தத் தொழிலாளர்களும் சங்கங்களை அமைத்துக் கொண்டு வீடுகள் கட்டிக்கொள்ள முன்வந்தால் அரசு உதவி செய்யும்.

திரு. கு. இராசமாணிக்கம்: வீட்டு வசதி வாரியம் தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்தப் பகுதிகளில் வீடு கட்ட திட்டங்களைப் போட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: அதுபற்றிய குறிப்புகள் இல்லை. தனிக் கேள்வி போடவேண்டும்.

E.S.I. Hospital, Coimbatore

* 522 *Q.*—THIRU N. K. PALANISWAMY: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to increase the bed strength in the E.S.I. Hospital at Coimbatore; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடும்பங்களுக்கு 11 படுக்கைகள் என்ற பழைய அளவுப்படி, 500 படுக்கைகள் கொண்ட அரசு தொழிலாளர் ஈட்டுறுதி மருத்துவமனை கோயம்புத்தூரில் கட்டப்பட்டது. ஆனால் ஈட்டுறுதி செய்து கொண்ட 1,000 தொழிலாளர் குடும்பங்களுக்கு 4 படுக்கைகள் என்று மாற்றியமைக்கப்பட்ட அளவு முறையைத்தான் பின்பற்ற வேண்டும் என்று தொழிலாளர் ஈட்டுறுதிக் கழகம் வற்புறுத்தியதன் பேரில், 300 படுக்கைகளுடன் கோவை அரசு தொழிலாளர்